# திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பேட்டி

# உலக நாத்திகர் மாநாடு - ஏன்?

# நாத்திகமே நன்னெறி என்பதற்காகவே!

## கி. வீரமணி விளக்கம்

*சென்னை ஜன.4 உலக நாத்திகர் மாநாடு - ஏன் - அதன் நோக்கம் என்ன என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் இன்று சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் அளித்த பதில் வருமாறு:*

*கடவுளோ, மதமோ மனித சமுதாயத்துக்கு நேர்மையான, ஒழுக்கமான சகோதரத்துவ வாழ்வை அளிக்கவில்லை. நாத்திகமே நன்னெறி! அது விரும்பும் மத மற்ற உலகத்தில்தான் சகோதரத்துவ மும், சமத்துவமும், ஒழுக்கமும் மனித குலத்துக்குக் கிடைக்க முடியும்.*

*மதவாதம், அடிப்படைவாதம் என்பனவற்றால் மதக் கலவரங்கள், மூடநம்பிக்கைகள் மக்களி டையே உருவாகின்றன. ஒழுக்கத்திற்கும் மதத்தில் இடமில்லை. கோயில் கருவறைக்குள்ளேயே ஓர் அர்ச்சகன் கற்பழிக்கிறான். எந்தத் தவறு செய்தா லும் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள ஒவ்வொரு மதத்திலும் பிராயச்சித்தமும், பாவ மன்னிப்பும் இருந்து வருகின்றன. இவற்றின் காரணமாக மனிதன் தவறு செய்ய, குற்றம் செய்ய அஞ்சுவதில்லை - அஞ்ச வேண்டிய அவசியமும் இல்லை.*

*தவறு செய்பவனுக்கு அதற்குரிய தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்பது நாத்திகர்களின் முடிவு. அதன் மூலம்தான் குற்றமிழைத்தவர்களும் சரி, மற்றவர்களும் சரி தவறு செய்ய அஞ்சக் கூடிய நிலை ஏற்படும். பேதமற்ற - மதமற்ற - கடவுள் நம்பிக்கையற்ற சகோதரத்துவமும், மனிதநேயமும், ஒழுக்கமும் செழித்தோங்க நாத்திகமே நன்னெறி என்பதுதான் இந்த மாநாட்டின் நோக்கமும், கருத்தும் ஆகும். நாத்திகம் - இன்றைய உலகுக்குத் தேவையான நல்வழி காட்டும் மாற்றுத் தத்துவ மாகும்.* (An Alternative Culture).

*நம் நாட்டில் விஞ்ஞானிகள் இருக்கிறார்கள். ஆனால் விஞ்ஞான மனப்பான்மை இருக்கிறதா என்பதுதான் கேள்வி.*

*எடுத்துக்காட்டாக சிறிஅரிகோட்டாவிலிருந்து அண்மையில் செயற்கைக்கோள் ஏவப்பட்டது. அது நடைபெறுவதற்குமுன் ‘‘இஸ்ரோ’வின் தலைவரான விஞ்ஞானி இராதாகிருஷ்ணன் குடும்பத்தோடு காள ஹஸ்தி சென்று கடவுளை வழிபட்டு இருக்கிறார். செயற்கைக்கோள் முயற்சி வெற்றி பெற வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருக்கிறார்.*

*ஆனால் நடந்தது என்ன? ஏவப்பட்ட சில நொடிகளிலேயே நொறுங்கிக் கடலில் வீழ்ந்தது.*

*கடவுள் நம்பிக்கை என்னாயிற்று? கடவுள் காப்பாற்றினாரா? அப்படி ஒருவர் - ஒரு சக்தி இருந்தால்தானே அதனால் காப்பாற்றிட முடியும்?*

*இதற்கு முன்பும்கூட திருப்பதி, குருவாயூரப்பன் கோயில்களுக்குச் சென்று கும்பிடுவது நடந் திருக்கிறது - ஆனாலும் ராக்கெட் எரிந்து போனது தான் மிச்சம். விண்வெளி ஆய்வில் ஈடுபடும் விஞ் ஞானிக்காவது அறிவியல் மனப்பான்மை இருக்க வேண்டாமா என்பது தான் எங்கள் கேள்வி.*

*‘‘இஸ்ரோ’’வின் தலைவர் ஒரு தனி மனிதர் அல்ல. மதச் சார்பற்ற அரசின் உயர்நிலை அதிகாரி. அவரே அரசின் கொள்கைக்கும், சட்டத்திற்கும் விரோதமாக நடந்து கொள்வது சரியா?*

*இந்திய அரசமைப்புச் சட்டம் என்ன கூறுகிறது? விஞ்ஞான மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்று கூறவில்லையா?*

*ராக்கெட்டை ஏவுவதற்கு முன் காளஹஸ்தி செல்லுவதும், திருப்பதி செல்லுவதும்தான் விஞ்ஞான மனப்பான்மையை வளர்க்கும் செயலா?*

*இந்த நிலையில்தான் தந்தை பெரியார் கொள்கை கள் மேலும் பரவ வேண்டியது அவசியமாகிறது. -நாத்திகர் மாநாடுகள் அவசியமாகின்றன என்று கூறினார்.*

# கலைஞர் நாத்திகர்தான்!

**செய்தியாளர்:** உலக நாத்திகர் மாநாட்டுக்குக் கலைஞரை அழைப்பீர்களா?

**பதில்:** சென்னையில் இந்த மாநாடு நடைபெற்றால் கண்டிப்பாக முதல் அமைச்சர் அவர்களை அழைத்திருப்போம். அவருக்கு வீண் சிரமம் கொடுக்க விரும்பவில்லை. மானமிகு கலைஞர் அவர்களைப் பொறுத்தவரை ''நான் ஒரு நாத்திகன்தான்' என பிரகடனப்படுத்திக் கொள்பவர்.திமுகவைச் சேர்ந்த கவிஞர் கனிமொழி. திட்டக்குழுத் துணைத் தலைவர் முனைவர் மு. நாகநாதன் போன்றவர்கள் மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள்.

**கேள்வி:** திமுக ஆட்சியில் பூமி பூஜை நடத்திக் கட்டடங்களை கட்டுகிறார்களே!

**பதில்:** யார் செய்தாலும் அது தவறுதான்; அதனைக் கண்டித்து சுட்டிக்காட்ட நாங்கள் தயங்க மாட்டோம்

*- செய்தியாளர்கள் கூட்டத்தில் தமிழர் தலைவர்*

# மதத்திலும் பகுத்தறிவின் தாக்கம்

வெறும் நம்பிக்கைகளைக் கொண்டு மதம் உயிர் வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

நேற்று 'இந்து' ஏட்டில் ஒரு செய்தி வெளி வந்துள்ளது. இதுவரை குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மத நம்பிக்கையின் அடிப்படையில் எதிர்த்து வந்த கிறித்துவ மதம் அதன் உலகத் தலைவராக இருக்கக்கூடிய போப் கூறி இருக்கிறார்.

குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்த, தடுக்க கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்த அனுமதி அளிக்கப்படுவதாகக் குறிப்பிட்டு விட்டாரே!

அதற்கு முன்பும், டார்வினின் பரிணாம தத்து வத்தை ஏற்றுக் கொண்டு – டார்வினைத் தண்டித்த தற்காக வருத்தத்தையும் போப் தெரிவிக்கவில்லையா?

இதன் மூலம் அறியப்படுவது என்ன? பகுத்தறி வின் தாக்கம் மதத்தையும் பாதித்துவிட்டது என்பது தானே இதன் பொருள்?

இங்கிலாந்தில் சர்ச்சுகளில் பெண்களும் பாதிரி களாவது பற்றி சர்ச்சை எழுந்துள்ளது. மூன்று, நான்கு பேர்கள் மட்டுமே எதிர்த்தனர். ஆனால் பெரும் பான்மையினர் இந்தக் கருத்துக்கு ஆதரவு தெரி வித்துவிட்டனர். மதம்– பழைய நம்பிக்கைகளின்படி, மத நூல்களில் கூறியபடி இனி நடக்க முடியாது என்பது தெளிவு.

***– செய்தியாளர்களின் கூட்டத்தில்***
***திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி. (சென்னை பெரியார் திடல் 4.1.2011)***

# உலக நாத்திகர் மாநாட்டிற்கு இந்தியா - உலகின் பல நாடுகளிலிருந்தும் நாத்திக அறிஞர்கள் வருகை

**சென்னை, ஜன. 4-** உலக நாத்திகர் மாநாட்டிற்கு இந்தியா மட்டுமல் லாது, உலகத்தின் பல நாடுகளி லிருந்து நாத்திக அறிஞர்கள் பங்கேற் கிறார்கள் என்று திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி கூறினார்.

சென்னை பெரியார் திடலில் இன்று (4.1.2011) செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் திராவிடர் கழக தலைவர் தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்கள் கூறியதாவது:

**புத்தாண்டு வாழ்த்து**

பத்திரிகை, ஊடக நண்பர்களுக்கு முதலில் எங்களது புத்தாண்டு வாழ்த் துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

உலக நாத்திகர் மாநாடு திருச்சியில் ஜனவரி 7, 8, 9 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கிறது. திராவிடர் கழகம், பகுத்தறிவாளர் கழகம் மற்றும் விஜய்வாடா கோரா நாத்திகர் மய்யமும் இணைந்து இம்மாபெரும் மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்த இருக்கிறது.

**மாநாடு திருச்சி - தஞ்சை**

திருச்சியிலும், தஞ்சை - வல்லம் பெரியார் மணியம்மை பல்கலைக் கழகத்திலும் மாநாடு நடைபெறு கிறது. இந்த மாநாட்டில் பங்கேற்க உலக நாத்திகர்கள் வருகிறார்கள். அதேபோல் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் நாத்திகப் பேராளர்கள் வருகிறார்கள்.

**முக்கியப் பிரமுகர்கள்**

ஜனவரி 7ஆம் தேதி முதல் நாள் மாநாட்டிற்கு நான் (கி.வீரமணி) தலைமை தாங்குகிறேன். மாநாட்டை அனைத்துலக மனித நேய நன்னெறிக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் நார்வே நாட்டைச் சார்ந்த லெவி ஃபிராகல் தொடங்கி வைக்கிறார்.

விஜயவாடா நாத்திகர் மய்ய செயல் இயக்குநர் முனைவர் விஜயம் மாநாட்டு நோக்கத்தைப் பற்றி உரை யாற்றுகிறார். மாநாட்டு சிறப்புப் பேருரையை கவிஞர் கனிமொழி நிகழ்த்துகிறார்.

பகுத்தறிவாளர் கழக மாநில பொதுச் செயலாளர் வீ.குமரேசன் வர வேற்புரை நிகழ்த்துகிறார். மாநாட்டு மலரை பின்லாந்து நாட்டைச் சார்ந்த சுயசிந்தனையாளர் சங்கத் தலைவர் பெக்கா எலோ வெளியிடுகிறார்.

அறிவியல், கண்காட்சியை தமிழ் நாடு திட்டக்குழு துணைத் தலைவர் முனைவர் மு.நாகநாதன் திறந்து வைத்து உரையாற்றுகிறார்.

தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற துணைத் தலைவர், மேனாள் துணை வேந்தர் முனைவர் அ.இராமசாமி, புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைக்கிறார்.

இந்திய பகுத்தறிவாளர் சங்கத் தலைவர் முனைவர் சனல் இடமருகு, சிங்கப்பூர் பேராசிரியர் எஸ்.ரத்ன குமார், மலேசிய நாட்டு திராவிடர் கழக அமைப்பாளர் கே.ஆர்.ஆர். அன்பழகன், அமெரிக்காவில் சிகா கோவை தலைமை இடமாகக் கொண்டு இயங்கும் பெரியார் பன்னாட்டு அமைப்பின் இயக்குநர் டாக்டர் சோம.இளங்கோவன், டாக் டர் இலக்குவன் தமிழ் போன்ற வெளிநாட்டுப் பிரமுகர்கள் பங்கேற்று உரையாற்றுகின்றனர்.

**இரண்டாம் நாள் மாநாடு**

இரண்டாம் நாள் மாநாடு ஜனவரி 8ஆம் தேதி நடைபெறுகிறது. மாலை 5 மணிக்கு மாபெரும் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி நடைபெறுகிறது.

அதற்கடுத்து மாபெரும் பொதுக் கூட்டம் திருச்சி புத்தூர் நான்கு சாலை சந்திப்பில் நடைபெறுகிறது. பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்திலும், திருச்சி பெரியார் நூற்றாண்டு கல்வி வளாகத்திலும் பேராளர்கள் பங்கேற் கும் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

**மூன்றாம் நாள் மாநாடு**

ஜனவரி 9ஆம் தேதி மாநாட்டு நிறைவு நிகழ்ச்சி திருச்சி பெரியார் நூற்றாண்டு கல்வி வளாகத்தில் நடைபெறுகிறது.

மாநாட்டில் ‘சமூகநீதிக்கான கி.வீரமணி விருதை’’ அனைத்திந்திய பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் நலச் சங்கங்களின் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் கோ.கருணாநிதி அவர் களுக்கு அமெரிக்காவின் பெரியார் பன்னாட்டு அமைப்பு வழங்குகிறது.

மாநாட்டு நிறைவு விழாவில் பல்வேறு அறிஞர் பெருமக்கள் உரை யாற்றுகின்றனர்.

#### பொங்கல் விழா கொண்டாட்டம்

*அன்று பிற்பகல் 1 மணிக்கு தமிழர் திருநாள் பொங்கல் விழாவின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்திடும் வகையில் பொங்கல் விழா கொண் டாடப்படுகிறது.*

*டாக்டர் இலக்குவன் தமிழ், டெக்சாஸ் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மூத்த பேராசிரியர் வந்திருக் கிறார்; என் அருகில் அமர்ந்திருக் கிறார். பெரியார் பன்னாட்டமைப் பின் இயக்குநர்களில் ஒருவராக விளங்கக் கூடியவர் மாநாட்டில் பங்கேற்கிறார்.*

#### மாநாட்டிற்கு வரவிரும்பும் ஊடகத்தாருக்கு

*உலக நாத்திகர் (ஜன. 7, 8, 9) மாநாட்டிற்கு வரவிருக்கும் செய்தியா ளர்கள், ஊடகத்தைச் சார்ந்தவர்கள் திராவிடர் கழக பொதுச் செயலாளர் கலி.பூங்குன்றன் அவர்களையும், திராவிடர் கழக தலைமை நிலையச் செயலாளர் வீ.அன்புராஜ் அவர்களை யும் தொடர்பு கொள்ளலாம்.*

*உங்களுக்குத் தேவையான வசதி கள் செய்து தரப்படும். நீங்கள் மாநாட்டைப் பற்றி கட்டுரைகளை எழுதலாம் என்று கூறினார் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி.*

# திராவிடர் கழகத்தின் தனித்தன்மை என்ன?

நாத்திகக் கொள்கையை மக்கள் இயக்கமாக நடத்தி வருவது திராவிடர் கழகம் மட்டுமே. தமிழ்நாட்டில் நிறுவப்பட்டு இருக்கும் தந்தை பெரியார் சிலைப் பீடங்களில் கடவுள் மறுப்பு வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதனை உலகில் வேறு எங்கும் பார்க்கவே முடியாது. கம்யூனிஸ்ட் நாடுகளிலும் காணவே முடியாது.

“இந்தியன் எக்ஸ்பிரஸ்” ஏட்டில் ஒரு சிறப்புக் கட்டுரை வெளி வந்தது. அதில் காஞ்சிபுரத்தைப்பற்றி எழுதியிருந்தார் கட்டுரையாளர்.

காஞ்சி சங்கர மடத்தின் முன் பெரியார் சிலை இருக்கிறது. அதில் கடவுள் மறுப்பு வாசகமும் உள்ளது.

இதுபோன்ற காட்சியை வேறு எங்கும் காண முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

காலையில் சங்கராச்சாரியார் எழுந்தால் பெரியார் முகத்தில்தான் முழிக்க வேண்டும்.

திராவிடர் கழகம் வெறும் கடவுள் மறுப்பை மட்டும் பிரச்சாரம் செய்யவில்லை; சமுதாயத்தோடு இணைந்த பல பிரச்சினைகளை அதனையொட்டி செய்கிறது. கடவுளின் பெயரைச் சொல்லித்தான் ஜாதியைக் காப்பாற்றுகின்றனர்.

கடவுள் மறுப்பு என்பது ஜாதி ஒழிப்பு என்ற கொள்கையை கொண்டதாகவே இருக்கிறது.

மும்பையில் 1999இல் உலக மனிதநேய பகுத்தறிவு அமைப்பின் (IHEU) சார்பில் நடைபெற்ற மாநாட்டில் திராவிடர் கழகம் மிக முக்கியமான தீர்மானத்தைக் கொண்டு சென்று நிறைவேற்றும்படிச் செய்தது.

ஜாதி ஒழிப்பு - அதன் விளைவான தீண்டாமை ஒழிப்பு என்பதை இந்த அமைப்பின் கொள்கையாக ஏற்கும்படிச் செய்தது.

ஜாதி ஒழிப்பு என்பது மனித உரிமை, மனிதநேயக் கண்ணோட்டத்தில் மிக முக்கியமானதாகும்.

*(செய்தியாளர்கள் கூட்டத்தில் தமிழர் தலைவர் கி.வீரமணி)*

# பெரியார் நூல்களை மற்றவர்கள் வெளியிடக்கூடாதா?

**செய்தியாளர்:** பெரியார் கருத்துகள் பரவிட பெரியார் நூல்களை மற்றவர்கள் வெளியிடக்கூடாதா?

**பதில்:** யாரும் வெளியிடக்கூடாது என்று நாங்கள் எப்பொழுதும் சொல்ல வில்லை. தவறாகப் பிரச்சாரம் செய்யக் கூடாது.

நூலை வெளியிடும் முன் எங்களிடம் அனுமதி பெற வேண்டும் என்றுதான் சொல்லுகிறோம். அதேபோல அனுமதி பெற்று வெளியிட்டுக் கொண்டு மிருக்கிறார்கள்.

ஏன் அனுமதி பெறவேண்டும் என்று சொல்லுகிறோம்? பெரியார் கருத்துகள் என்று அதில் திரிபு வாதம் வந்து விடக் கூடாதல்லவா?

புத்தருக்குப் பின்னாலே புத்தரின் பெயரைச் சொல்லி புத்த ஜாதகக் கதைகள் வந்துவிடவில்லையா?

யார் வெளியிடுவதாக இருந்தாலும் அதனை எங்களிடம் அனுப்பி வைக்கட்டும். அதனைச் சரி பார்த்து அனுமதி வழங்கப்படும் என்பதுதான் எங்களின் நிலைப்பாடு. இதற்கு மாறாகப் பிரச்சாரம் செய்வது தவறு.

*– செய்தியாளர்கள் கூட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் (4.1.2011)*

# கடவுள் நம்பிக்கையும் - ஒழுக்கமும்!

இன்றைக்குகூட பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருக்கிறது. நாகர்கோவில் கிருஷ்ணன் கோவில் மேலத் தெருக் கரை யில் ஒரு கிறிஸ்தவ கோயில் உள்ளது. இந்த கோவிலில் திடீரென்று நான்கரை அடி உயர அந்தோணியார் சிலையை யாரோ வைத்து விட்டனர். இதைக் கண்டு அப்பகுதியில் உள்ளோர் ஒரு பிரிவினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதற்குப் பதிலாக இன்னொரு பிரிவினர் இரண்டு நாகர் சிலைகளை அந்தோணியார் சிலை அருகே வைத் தனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

தகவல் அறிந்து ஆர்.டி.ஓ. வந்தார். இரண்டு சிலைகளையும் அகற்றுங்கள் என்று உத்தர விட்டார். அதன் பிறகுதான் அமைதி ஏற்பட்டது. ஆகவே கடவுளால்தான் பிரச்சினையே.

கடவுள் நம்பிக்கைக்கும் ஒழுக்கத்துக் கும் என்ன சம்பந்தம்? 1971இல் ஒரு நிகழ்ச்சி தஞ்சாவூரில் நடந்தது.

தஞ்சையில் திறந்தவெளி சிறைச்சாலை ஒன்று இருக்கிறது. கைதிகளை அறையில் அடைப்பதில்லை. சுற்றிலும் சுவர். அவரவர்களுக்குத் தெரிந்த கைத் தொழிலைச் செய்வார்கள்.

தஞ்சை பகுத்தறிவாளர் கழகத்தின் துணைத் தலைவராக இருந்தவர் நாகையா. அவர்தான் அந்தத் திறந்த வெளிச் சிறைச்சாலையின் அதிகாரி.

தந்தை பெரியார், அவர்களை திறந்த வெளி சிறைச்சாலையைப் பார்வையிடு மாறு கேட்டுக் கொண்டார். தந்தை பெரியார் அவர்களும் சென்று சுற்றிப் பார்த்தார். அந்தச் சிறைச்சாலையில் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் இருந்தனர்.

தந்தை பெரியாரை எதிர்பாராத விதமாகக் காண நேர்ந்த அந்தக் கைதி களுக்கு மிகுந்த மகிழ்ச்சி. தங்களுக்கு அறிவுரை கூறுமாறு கேட்டுக் கொண் டனர்.

சிறை அதிகாரியின் அனுமதியோடு தந்தை பெரியார் சிறிது நேரம் பேசினார்.

கூடியிருந்த கைதிகளைப் பார்த்து, ``உங்களில் கடவுள் நம்பிக்கை இல்லாத வர்கள் இருந்தால் கை தூக்குங்கள்'' என்றார் ஒருவரும் கை தூக்கவில்லை.

உடனே தந்தை பெரியார் – அவர்களைப் பார்த்துக் கேட்டார் ``நீங்கள் அனைவரும் கடவுள் நம்பிக்கைக்காரர்கள் தானே? கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் தப்பு செய்யப் பயப்படுவார்கள். கடவுள் தண்டிப்பார் என்று கருதி குற்றங்களைச் செய்ய மாட்டார்கள் என்று சொல்லு கிறார்களே – அது உண்மையல்ல – பொய் என்பது உங்கள் விஷயத்தில் நிரூபிக்கப்பட்டு விட்டதா –இல்லையா?

எல்லோரும் குற்றம் செய்துவிட்டு – கொலையைச் செய்துவிட்டுத்தானே ஆயுள் தண்டனை பெற்றுள்ளீர்கள்! உங்கள் கடவுள் நம்பிக்கை, கொலை செய்யாமல் உங்களைத் தடுக்க வில்லையே'' என்று தந்தை பெரியார் கூறியது அனைவருக்கும் பொறி தட்டியது போல் இருந்தது.

இந்த உண்மைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லவும், மக்களை நல்வழிப் படுத்தவும் கடவுள் மறுப்பும், மத மறுப்பும் தேவைப்படுகிறது. தந்தை பெரியார்தம் பகுத்தறிவுக் கொள்கைகள் மக்கள் மத்தியில் பரப்பப்பட வேண்டியுள்ளன.

திருச்சி – உலக நாத்திகர் மாநாடும் அந்த வகையில் மிக முக்கியமானது.

***– செய்தியாளர்களிடம்***

***தமிழர் தலைவர் 4.1.2011***

## நுழைவுத் தேர்வும் கேதன் தேசாயும்

*நுழைவுத் தேர்வை 22 ஆண்டு களுக்கு முன்பே திராவிடர் கழகம் கடுமையாக எதிர்த்தது. அது எந்த வகையான நுழைவுத் தேர்வாக இருந்தாலும் அது தேவையற்றது. மேலும் அது ஒரு சுமையாகத்தான் அமையுமே தவிர வேறு அல்ல.*

*ஏற்கெனவே மாணவர்கள் அரசு தேர்வு எழுதி மதிப்பெண் களை பெற்று தான் அடுத்த படிப்புக்குத் தகுதியாகி வருகி றார்கள். பிறகு எதற்கு மாணவர் களுக்கு மேலும் ஒரு தேர்வு - நுழைவுத் தேர்வு?*

*இன்றைக்கு மருத்துவத் துறைக்கு நுழைவுத் தேர்வை கொண்டு வரவேண்டும் என்பதில் மத்திய அரசின் மெடிக்கல் கவுன்சில் தான் பிடிவாதமாக இருக்கிறது.*

*அதே மருத்துவக் கவுன்சிலின் தலைவர் கேத்தன் தேசாய் என்பவர் பல கோடி ரூபாய் ஊழல் செய்து சிறைக்குச் சென்றவர். எப்படி வெளியே வந்தார் என்பதே ரகசியம். யாருக்கும் தெரியவில்லை.*

*ஆனால் திடீரென்று பார்த்தால் குஜராத் அரசில் மெடிக்கல் துறையில் இன்றைக்குப் பெரிய பதவியில் இருக்கிறார். ஊடகத் துறையினர் நுழைவுத் தேர்வு கூடாது என்பதையும் பெரிது படுத்தி எழுத வேண்டும். கேத்தன் தேசாய் ஊழலையும் அவர் எப்படி வெளியே வந்திருக்கிறார். அதைப்பற்றி நீங்கள் விரிவாக எழுதி வெளியே கொண்டு வர வேண்டும்.*

**(4.1.2011 சென்னை செய்தியாளர்கள்**
**கூட்டத்தில் தமிழர் தலைவர் கி.வீரமணி)**